**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1854/2025**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : செல்வராஜ் | **Caste** | : |
| **Father's Name** | : பெரியசாமி | **Calling** | : மதுவிலக்கு அமலாக்கபிரிவில்– தலைமை காவலர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 47 |
| | | **Dated** | : 03.07.2026 |

**03.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு.**செல்வராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 23.02.2025ம் தேதி 13.00 மணிக்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆறுமுகம், தலைமை காவலர் பாலகிருஷ்ணன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் NGO காலனி, உழவர் சந்தை அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி முருகன் என்பவர் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல் செய்து அறுவறுப்பை ஏற்படுத்தும் வகையில், பொது இடத்தில் உட்கார்ந்து கொண்டு மதுபாட்டில்களுடன் பிராந்தி குடித்துக்கொண்டிருந்த குற்றத்திற்காக சிறப்பு சார்பு ஆய்வாளர் எதிரிகளை 13.10 மணிக்கு கைது செய்து , திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்று

மருத்துவ சோதனைக்கு உட்படுத்தினார். எதிரியுடன் 13.30 மணிக்கு நிலையம் வந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வகையான மதுவினை வைத்திருந்தார் என நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மதுபாட்டிலை கைப்பற்றியதாக நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- 02/07/26

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Sd/-
Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1854/2025**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலகிருஷ்ணன் | **Caste** | : |
| **Father's Name** | : கருப்பண்ணன் | **Calling** | : நெடுஞ்சாலை பிரிவு காவல் நிலையம்-தலைமை காவலர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 50 |
| | | **Dated** | : 03.07.2026 |

**03.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திரு.**பாலகிருஷ்ணன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

நான் தற்போது திண்டுக்கல் நெடுஞ்சாலை பிரிபு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.இதற்கு முன்பு தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 23.02.2025ம் தேதி 13.00 மணிக்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆறுமுகம், தலைமை காவலர் செல்வராஜ் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் NGO காலனி, உழவர் சந்தை அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி முருகன் என்பவர் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல் செய்து அறுவறுப்பை ஏற்படுத்தும் வகையில், பொது இடத்தில் உட்கார்ந்து கொண்டு மதுபாட்டில்களுடன் பிராந்தி குடித்துக்கொண்டிருந்த குற்றத்திற்காக சிறப்பு சார்பு ஆய்வாளர் எதிரிகளை 13.10 மணிக்கு கைது செய்து ,

திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ சோதனைக்கு உட்படுத்தினார். எதிரியுடன் 13.30 மணிக்கு நிலையம் வந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வகையான மதுவினை வைத்திருந்தார் என நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மதுபாட்டிலை கைப்பற்றியதாக நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1854/2025**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **ஆறுமுகம்** | **Caste** | : |
| **Father's Name** | : கருப்பையா | **Calling** | : தாலுகா காவல் நிலையம்- சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| **Village** | : **திண்டுக்கல்** | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 52 |
| | | **Dated** | : **03.07.2026** |

**03.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 திரு.**ஆறுமுகம்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>எதிரி ஆஜர்</u>

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2025ம் தேதி 13.00 மணிக்கு நானும் தலைமை காவலர்கள் செல்வராஜ், பாலகிருஷ்ணன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் NGO காலனி, உழவர் சந்தை அருகே சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி முருகன் என்பவர் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடைஞ்சல் செய்து அறுவறுப்பை ஏற்படுத்தும் வகையில், பொது இடத்தில் உட்கார்ந்து கொண்டு மதுபாட்டில்களுடன் பிராந்தி குடித்துக்கொண்டிருந்த குற்றத்திற்காக சிறப்பு சார்பு ஆய்வாளர் எதிரிகளை 13.10 மணிக்கு கைது செய்து , திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ சோதனைக்கு உட்படுத்தினேன். எதிரியுடன் 13.30 மணிக்கு நிலையம் வந்து நான் எதிரி மீது நிலைய குற்ற எண்.103/2025

U/s.4(1)(C) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.**முதல் தகவல் அறிக்கை அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமுலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வகையான மதுவினை வைத்திருந்தார் என நான் சார்பு ஆய்வாளரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மதுபாட்டிலை கைப்பற்றியதாக நான் 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ தேதியில் மதுபாட்டில்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரின் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1854/2025**
**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : கிருஷ்ணவேனி | **Caste** | : |
| **Husband's Name** | : கிரிதரன் | **Calling** | : சார்பு ஆய்வாளர்– அம்பாத்துரை காவல் நிலையம் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 33 |
| | | **Dated** | : 03.07.2026 |

**03.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திருமதி.**கிருஷ்ணவேனி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>எதிரி ஆஜர்.</u>

நான் தற்போது திண்டுக்கல் அம்பாத்துரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 23.02.2025 ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 103/2025 U/s.4(1)(C) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை எனது பார்வைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் செல்வராஜ், பாலகிருஷ்ணன், ஆறுமுகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன்.பின்னர் இவ்வழக்கின் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசா1 முதல் அசா3 வரை உள்ள சாட்சிகள் அனைவரும் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன வகையான மதுபாட்டில் வைத்திருந்தார் என முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சம்பவத்தேதியில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

S. [signature]

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

[signature]

Judicial Magistrate No.I

Dindigul.